செ.வெ. எண்: 200 நாள்: 28.01.2012

## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு, சுற்றுசூழல் சுகாதார மேம்பாட்டை உள்ளடக்கிய தூய்மையான கிராம இயக்கம் என்ற ஒரு திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால், அவர்களது முந்தைய ஆட்சிக் காலத்தில் 2003 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது.

திறந்தவெளியில் மலம் கழித்தலை தடுத்தல், மழைநீர் சேகரிப்பு மற்றும் கழிவு நீரினை மறு சுழற்சி செய்தல், திடக் கழிவு மேலாண்மை, மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல், மேலும் தனி நபர் இல்லங்கள், பள்ளிகள் ஆகியவற்றில் சுகாதார வசதி ஏற்படுத்துதல் மற்றும் திறந்தவெளி மலங்கழித்தலை முழுமையாக அகற்றுவதன் மூலம் தூய்மையான சூழலை உருவாக்கியும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் சேகரிப்பு வாயிலாக நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு அரசின் சார்பில் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டு வந்தன. இதன் மூலம் முழுமையான சுகாதார அமைப்புகள் பெற்ற கிராமங்கள் உருவாகின. ஆனால் இந்தத் திட்டம் 2006-07 முதல் செயல்படுத்தப்படவில்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சுகாதார கிராமங்களை உருவாக்குகின்ற இந்த திட்டத்தை மீண்டும் வெற்றிகரமாக செயல்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி மீண்டும் செயல்படுத்தப்படும் தூய்மையான கிராம இயக்கத்தின் மூலம் 100 விழுக்காடு சுகாதாரத்தினை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு ரொக்கப் பரிசாக 5 லட்சம் ரூபாய் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தின் 31 ஊரக மாவட்டங்களில், ஒரு மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி என்ற அடிப்படையில் 31 கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரொக்கப் பரிசாக 5 லட்சம் ரூபாய் வழங்கப்படும். இதற்காக 1 கோடியே 55 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இத் திட்டத்தின் மூலம், தமிழகத்தின் அனைத்து கிராமங்களும் சுகாதார கிராமங்களாக உருவாகும். இதன் மூலம் கிராமங்களில் நல்லதொரு சுற்று சூழல் நிலை ஏற்படும்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 28.1.2012